**செய்தி வெளியீடு எண்: 535** **நாள்: 23.07.2020**

# <u>செய்தி வெளியீடு</u>

## <u>"உள்ளாட்சி அமைப்புகளில், ஒருங்கிணைந்த நோய் கண்காணிப்பு திட்டம் " எனும் தலைப்பில் இணையதள வாயிலான பங்கேற்பு கலந்தாய்வு கூட்டம்</u>

-------

"உள்ளாட்சி அமைப்புகளில், ஒருங்கிணைந்த நோய் கண்காணிப்பு திட்டம் எனும் தலைப்பில் இணையதள பங்கேற்பிலான கலந்தாய்வு கூட்டம், மாநில வளர்ச்சி கொள்கை குழுவின் மாண்புமிகு துணைத்தலைவர், திரு. சி. பொன்னையன் அவர்களின் தலைமையில் 22.7.2020 அன்று காலை 11.00 மணியளவில் மாநில வளர்ச்சி கொள்கை குழுவின் கூட்ட அரங்கில் நடைபெற்றது. இதில் தொடர்புடைய பங்காளர் துறை அலுவலர்கள் மற்றும் துறை சார்ந்த வல்லுநர்கள் பங்கேற்றனர்.

இந்த கலந்தாய்வு கூட்டத்தின் நோக்கம், ஒருங்கிணைந்த நோய் கண்காணிப்பு திட்டத்தின் கீழ், (ஊராட்சிகள் மற்றும் பிற பகுதிகளிலும்) பொருத்தமான நோய் முன்அறிதல் சேவையை அளித்து, மருத்துவ பணியின் தரத்தினை உயர்த்தி, சமூகத்தில் நோயுற்ற தன்மையையும் மற்றும் இறப்பு விகிதத்தையும் குறைப்பதற்கு ஏதுவாக, உரிய பங்காளர் துறைகளின் உள்ளீடை, வழங்குவது குறித்து கலந்தாய்வு செய்தல் ஆகும்.

ஒருங்கிணைந்த நோய் கண்காணிப்பு திட்டம் என்பது, நோய் பரவலை 24 x 7 என்ற கால அளவில் தொடர்ந்து கண்காணிக்கப்படும் செயல்பாடு மூலமாக கண்காணித்து, பெருந்தொற்றுநோய்களை தடுத்தல் மற்றும் குறைத்தலுக்கான திட்டமாகும். நுண்கிருமிகள் மூலமாக பரவும் தொற்று நோய் நிகழ்வுகளை, உள்ளாட்சி அமைப்பிற்கும் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் உடனுக்குடன் அறிவிக்கப்பட்டு, தடுப்பு முறைமைகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ், அண்டை மாநிலங்களிலிருந்து பரவும் தொற்றுநோய்களும் கண்டறியப்பட்டு அறிவிக்கப்படுகிறது. போர்க்கால அடிப்படையில் நோய் பரவல் தடுப்பு முறைமைகளை மேற்கொண்டிட, மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் அதிவிரைவு செயல்படும் அணிகள் உருவாக்கப்படுகிறது.

திரு. அனில் மேஷ்ராம், இ.ஆ.ப., உறுப்பினர் செயல், மாநில வளர்ச்சி கொள்கை குழு, முனைவர் கே.எஸ். பழனிசாமி, இ.ஆ.ப., இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, மரு. பி. சம்பத், இணை இயக்குநர் (தொற்றுநோய்) மற்றும் மாநில நோய் கண்காணிப்பு அலுவலர், பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து துறை, மரு. அருள் ஆனந்த், மருத்துவ அலுவலர், Universal Health Care & Urban Health, பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து துறை, மரு. இலட்சுமி தேவி, தொடர்பு அலுவலர், ஒருங்கிணைந்த நோய் கண்காணிப்பு திட்டம், சென்னை பெருநகர மாநகராட்சி, திருமதி. உமா மகேஸ்வரி, இணை இயக்குநர், பேரூராட்சிகள் இயக்குநரகம் மற்றும் தொடர்புடைய துறைகளின் உயர் அலுவலர்கள் இக்கலந்தாய்வு கூட்டத்தில் இணையதள வாயிலாக பங்கேற்றனர்.

மரு. சம்பத், இணை இயக்குநர் (தொற்றுநோய்) மற்றும் மாநில நோய் கண்காணிப்பு அலுவலர், பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து துறை அவர்கள், ஒருங்கிணைந்த நோய் கண்காணிப்பு திட்டத்தின் தற்போதைய அமைப்பு, கண்காணிப்பின் வகைபாடுகள், அறிக்கை அளிக்கப்பட வேண்டிய தொற்றுநோய் கண்காணிக்கும் அலகு மற்றும் இத்திட்டத்தின் கீழ் உள்ளாட்சி அமைப்புகளின் பொறுப்பு ஆகியவை குறித்து காணொலி விளக்கக் காட்சிகள் மூலம் எடுத்துரைத்தார். மாநில கொள்கை வளர்ச்சிக்குழவின் துணைத் தலைவர் அவர்கள், பொது மக்கள் அவர்தம் வசிப்பிடங்களில் தொற்றுநோய் பரவல் குறித்து, அச்சு ஊடகம், மின்னணு ஊடகம் மற்றும் சமூக ஊடகங்கள் வாயிலாக, உரிய அரசுத் துறை அலுவலர்களுக்கு அறிக்கை செய்ய வேண்டியதன் முக்கியத்துவத்தை அவர்களுக்கு தெரிவிக்க வேண்டும் எனவும், மேலும், இது தொடர்பாக, ஊரகப் பகுதிகளிலும் நகர்ப்புற பகுதிகளிலும் அனைத்து தெருக்களிலும் சிறு சிறு சந்துகளிலும் விழிப்புணர்வு பிரச்சார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என அறிவுறுத்தினார். மாநில கொள்கை வளர்ச்சிக்குழவின் உறுப்பினர் செயலர் அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, இப்பணிகளுக்கான விழிப்புணர்வு பயிற்சி திட்டங்களை, சுகாதாரத் துறை மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு கழகத்துடன் இணைந்து வடிவமைத்து, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு வழங்கலாம் என அறிவுறுத்தினார்.

-----

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**